REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 2உ செவ்வாய் (15—1—57) ★ ★ வெளியீடு: தை 3உ புதன் (16—1—57) [இதழ் 187

1300 கோடி டன் நிலக்கரி

டில்லி, சன. 15—

இந்தியாவில் உள்ள இராணிகஞ்ச் நிலக்கரி வயல்களில் சுமார் 1,300 கோடி டன் நிலக்கரி இருக்கும் என்று சில நில ஆராய்ச்சியின் தப்புறவு மூலம் தெரியவருகிறதாம்!

தற்போதைய தேவையின் அளவுப்படி அங்குள்ள நிலக்கரி சில நூற்றாண்டுகளுக்கு இந்தியாவுக்குப் போதுமானதாக இருக்குமாம்!

அணைத்துக் கொண்ட அகாலிகளுக்கு காங்கிரஸ் பட்டை நாமம்!

பஞ்சாபில் காங்கிரஸ் அபேட்சகர் தேர்வில் தகராறு

கோரிக்கைக்கு இணங்காவிட்டால் காங்கிரசை ஆதரிக்கமாட்டோம்

அகாலி தலைவர் தாராசிங் எச்சரிக்கை

புதுடில்லி, சன. 15—

வரப்போகும் பொதுத் தேர்தலுக்கு, பஞ்சாப் மாநிலத்திலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் கட்சி அபேட்சகர்கள் பற்றி அண்மையில் காங்கிரசில் சேர்ந்துள்ள அகாலிதளத்தவர், பெரும் ஏமாற்றம் தெரிவித்திருக்கிறார்களாம்.

மாஸ்டர் தாராசிங் அகாலி தளத்தலைவருக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றம் குறித்து பண்டித நேருவுடன் 45 நிமிட நேரம் பேசிக்கொண்டிருந்து தெரிவித்திருக்கிறாராம்.

தங்களுக்கு, அபேட்சகர்கள் ஒதுக்குவதில் நியாயம் கிடைக்கவில்லையானால், தேர்தலில் காங்கிரசை தாம் ஆதரிப்பதற்கில்லை என்றும், அகாலிதளத் தலைவர் தாராசிங் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறாராம்.

"அபேட்சகர் பொறுக்கும்போது, காங்கிரசார், அகாலி தளத்தவரை 'வீழ்ந்துபட்ட விரோதிகள்,' என்று கருதிக்கொண்டு, செயல்பட்டிருக்கின்றனர்; நான் கூறுகிறேன்—'நாங்கள் வீழ்ந்துபடவும் இல்லை; விரோதிகளுமல்ல,' என்றும் தாரசிங் கூறியிருக்கிறார்.

மேலிடம் நிராகரிக்கிறது

மக்கள் சபைக்கும் பஞ்சாப் சட்டசபைக்கும் அகாலிகளுக்கென ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இடங்கள் ஒதுக்கித் தரவேண்டும் என்ற கோரிக்கையை காங்கிரஸ் மேலிடத்தவர் நிராகரித்துவிட்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

தாராசிங்மீது பாய்ச்சல்

அகாலிகள், பஞ்சாப் சட்டசபைக்கு 49 இடங்களுக்கும், மக்கள் சபைக்கு 9 இடங்களுக்கும் போட்டியிட அனுமதிக்கப்படவேண்டும் என்று தாராசிங் கோரியதைக் குறித்து, காங்கிரஸ் மேலிடத்தவர் அவர்மீது கோபம் கொண்டிருக்கிறார்களாம்; 'இதுபோலக் கேட்பது, காங்கிரசின் கொள்கைகளுக்கும் இலட்சியத்திற்கும் விரோதமான பேரம் பேசுவதாகும்,' என்று மேலிடம் கூறுகிறதாம்!

எனவே, எந்த ஒரு குறிப்பிட்ட அளவு இடங்களையும் அகாலிதளத்தவருக்கென ஒதுக்கித்தர வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்பதற்கில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டதாம்!

தாராசிங் எச்சரிக்கை

"இந்த நேரத்தில் காங்கிரஸ் அகாலிதளத்தவரை ஏமாற்றுமானால், காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகள் தான் வலுப்பெறும்" என்று தாராசிங் எச்சரித்திருக்கிறார்.

"அகாலிகள் எனக்குக் கட்டுப்படாமல்கூடப் போய்விடலாம்; புதிய தலைமையைத் தேடிக்கொள்ளலாம்; சிலர் கம்யூனிஸ்டுகளாகக்கூட ஆகிவிடலாம். இந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்காகவாவது, காங்கிரஸ் தலைமை, அகாலிகளின் கோரிக்கையை ஏற்றேயாக வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார் தாராசிங்!

புதியதோர் உத்தரவு

சிக்கனத்தைக் கையாள வேண்டும் என்ற நோக்கத்துடன், இனி புதிதாக 3-வது, 4-வது வகுப்பு ஊழியர்களை நியமிக்கவேண்டாமென்று மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

இருக்கவேண்டிய முறையில் உறவு இல்லையாம்!

கராச்சி, சன. 15—

"இந்தியாவுடன் பாகிஸ்தான் கொண்டுள்ள உறவு, இருக்கவேண்டிய முறையில் இல்லாததால், பாகிஸ்தான் வீரர்கள் 'எப்பொழுதும் தயாராக' இருக்கவேண்டுமென்று பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மிர்சா, ரிசல்பூரில், விமானப் படை வீரர்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கோஷ்டிகளிடை பதவிச் சண்டை

அபேட்சகர் பட்டியல் பலருக்கு அதிருப்தி தருகிறதாம்!

சென்னை, சன. 15—

அண்மையில் வெளியிடப்பட்ட தமிழ் நாட்டுச் சட்டசபைக்கான காங்கிரஸ் அபேட்சகர் பட்டியல், பழம்பெரும் காங்கிரசாரிடையே பெரும் அதிருப்தியை ஊட்டியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பல விரும்பத்தகாதவர்களின் பெயர்கள் பட்டியலில் காணப்படுவதாகவும் சில காங்கிரசார் கூறுகின்றனராம்.

ஆட்சேபிக்க வேண்டிய அம்சமாக இருப்பது, எவரெவர் காங்கிரஸ் அபேட்சகர்களாயிருப்பதற்குத் தகுதியற்றவர்களோ அவர்களுக்கெல்லாம் காங்கிரஸ் 'டிக்கெட்' தரப்பட்டிருப்பதாகவும் நியாயமாகத் தரப்படவேண்டியவர்களுக்குத் தரப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில் தேர்தலுக்கு நிற்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அபேட்சகர் ஒருவர், பொதுவாகக் காங்கிரஸ் அபேட்சகர் பட்டியல் தனக்குப் பெரும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் தந்திருப்பதால், தான் காங்கிரஸ் அபேட்சகராக நிற்க விரும்பவில்லை என்று அவர் காமராசருக்குத் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

திராவிடர் திருநாளின் தனிச் சிறப்பு

சென்னையில் பல்லாயிரம் மக்கள் விழாக்கொண்டாடினர்

பொதுச்செயலாளர் சிறப்புரையாற்றிய மாபெரும் கூட்டம்

சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில், சென்னை - மைலாப்பூர் கபாலி தியேட்டருக்கு எதிரிலுள்ள திடலில் 14-1-57 திங்கள் மாலை திராவிடர் திருநாள் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு சென்னை மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமை வகித்தார்.

திடல் முழுவதும் தோரணங்களாலும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் குறித்த விளம்பரத் தட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அழகிய தோரணங்களோடு ஒளிவிளக்குகளாலான 'உதய சூரிய'னை உச்சியில் பெற்றிருந்த மேடை, பார்க்கப் பரவசமூட்டுவதாக அமைந்திருந்தது.

தோழர் மாசிலாமணி குழுவினரின் நாதசுவர இசையுடன் விழா மாலையில் தொடங்கியது.

அடுத்து, ஜிக்கி விளையாட்டுக் குழுவினரின் சிலம்பு, மல்யுத்த விளையாட்டுக்களும், தோழியர் வசந்தவல்லி குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பின்னர் 50-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் பொ. இரத்தினவேலு அனைவரையும் வரவேற்று விழாவுக்குத் தோழர் செங்குட்டுவனைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். அதனைத் தோழர் தம்பித்துரை வழிமொழிந்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின்னர் முதன் முதலாகத் தோழியர் அருண்மொழி பேசினார்.

அவர் தமது பேச்சில் இந்த ஆண்டுப் பொங்கல் தனிச் சிறப்புடையது என்றும், வருகிற ஆண்டில் இதைவிடச் சிறப்புடையதாக இருப்பதற்கு மக்கள் அடுத்து வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்தை ஆதரிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து தோழர் ஏ. கே. வில்வம் பேசுகையில், தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது ஆட்சியிலிருப்போரை

(4-ம் பக்கம் பார்க்க)

பண்டாவின் சிங்கள மயப்போக்கு

எதிர்த்துப் போராட இலங்கை தமிழர் முடிவு

சுதந்திர நாள் துக்கநாளாகக் கொண்டாடப்படும்

கொழும்பு, சன. 13—

மோட்டார் வண்டிகளின் பதிவு எண்கள் சிங்களத்தில் எழுதப்படுவதை எதிர்த்து இலங்கைத் தமிழர்கள், தொடர்ந்து போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழர்களின் இரண்டு பிரதான கட்சிகளான தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழர் காங்கிரசும் போராட்டம் பற்றி சில முடிவுகளை மேற்கொண்டிருக்கின்றன.

வரும் சனவரி 19-ந் தேதியன்று கார்களின் பதிவு எண்களுக்கு முன்னிருக்கும் சிங்கள—ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக, அவற்றிற்கு நேரான தமிழ் எழுத்துக்களைப் பொறிப்பது என்று அந்தக் கட்சிகளின் செயற்குழுக்கள் முடிவு செய்திருக்கின்றன என்றும் தெரிய வருகிறது.

துக்க நாள்

மேலும், இலங்கையின் சுதந்திர நாளான பிப்ரவரி 4-ந் தேதியை தமிழர் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்து, வீடுகளில் கருப்புக் கொடிகள் ஏற்றி துக்க நாளாகக் கொண்டாடுவது என்றும் முடிவு செய்திருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

ரேடியக் கதிர்வீச்சு

மனித உடல் தாங்கும் சக்தி பற்றி விஞ்ஞானி தகவல்

நியூயார்க், சன. 15—

அணுசக்தி ரேடியக் கதிர் வீச்சைத் தாங்கும் சக்தி இளமையில் கூடுதலாகவும் மூப்பில் மிகக் குறைந்தும் இருப்பதாக டாக்டர் ஹென்ரி பிளேர் என்னும் விஞ்ஞானி கூறியிருக்கிறார்.

அதே சமயத்தில் ஒருவர் தன்னுடைய உடம்பின் மீது தொடர்ந்து இக்கதிர்வீச்சு படும்படி வைத்துக்கொண்டால், பின்னர், உடம்பைத் தாக்கும் கதிர் வீச்சுகள் உடம்பைப் பாதிக்காது என்றும் அவர் கூறினார்.

உரிய காலத்திற்கு முன்னரே மூப்படைபவர்களை ரேடியக் கதிர் வீச்சு பெரிதும் பாதிப்பதாகவும், ஒரே தடவையில் பெரும் அளவில் தாக்கப்படுவதால் ஏற்படும் சேதம் பல தடவைகளில் சிறு அளவில் தாக்கப்படுவதால் ஏற்படும் சேதத்தை விடக் குறைந்திருப்பதாகவும் டாக்டர் பிளேர் கூறினார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 15—1—'57 செவ்வாய்

ஆளும் இலட்சணம்!

பச்சைத் தமிழர் காமராசர் ஆட்சியில் தமிழ் மக்கள் பெறுதற்கரிய பெரும் பேறுகளைப் பெற்றுவிட்டதாகவும், இனி பெறத்தக்கது எதுவுமே கிடையாது என்ற கருத்திலும் சில அரசியல் கட்டியக்காரர்கள், அனவரதமும் எழுதியும் பேசியும் வருகின்றனர். இப்படி எழுதியும் பேசியும் வருகிறவர்கள் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலாவது, ஏதோ அவர்கள் தம் கடமையைச் செய்கின்றனர் என்ற அளவிலாவது பொது மக்கள் திருப்தி கொள்வதற்கு இடமேற்படும்.

ஆனால், பொதுத் தேர்தலுக்குப் பிறகும் பச்சைத் தமிழர் காமராசர் ஆட்சி மறுபடியும் ஏற்படாதுபோகும் பட்சத்தில், தமிழ் நாடே—இல்லை—சென்னை மாகாணமே மீண்டும் ஒருமுறை கடலுக்குள் அமிழ்ந்து அழிந்துவிடப் போவதுபோல், அழுது அரற்றிக்கொண்டு இருப்பவர்கள், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாது இருப்பதுதான், வியப்புக்குரிய பெரும் விசித்திரமாக இருக்கிறது. எதிர்காலத்திலும் பச்சைத் தமிழரிடம் ஆட்சியை ஒப்படைக்கத் தவறிவிடும் தமிழ் மக்களை, பயங்கரமான மண்கம்பம் ஏற்பட்டு பூமி இரு பிளவாகப் பிளந்து விழுங்கிவிடப் போவதுபோன்று, பொதுவாகக் காங்கிரசுக் கட்சியை வேம்பென வெறுப்பதாகக் கூறும் அந்த அரசியல் கட்டியக்காரர்கள், மாரடித்து ஒப்பாரிவைத்து வருவது நகைச்சுவைக்கோர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

பச்சைத் தமிழர் பல அரும் பெரும் சாதனைகளைச் சாதித்துள்ளதாகவே விவாதத்திற்காக ஒப்புக்கொள்ளுவதானாலும், இவர் சாதித்துள்ள சாதனைகள் அனைத்தையும் ஒன்றுகூட விடாமல், மற்ற மாகாண காங்கிரசு அமைச்சரவைகளும் சாதித்திருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. சில மாகாண அமைச்சர்கள், பச்சைத் தமிழர் சாதித்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்படும் சாதனைகளைவிட இரண்டு மூன்று மடங்கு மிகுதியாகவும், குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே என்றில்லாது பல்லாயிரக்கணக்கான — சாதாரண மக்களுக்கும் நல்வாழ்வு அளிக்கக்கூடிய சாதனைகளைச் சாதித்துள்ளனர் என்பதையும் மறைத்துவிட முடியாது. எனவே, ஏதோ ஒரு காரணத்திற்காகவோ, எவருடைய வற்புறுத்தலுக்காகவோ, ஏதோ அரசியல் சுயநல சூதாட்ட வெற்றிக்காகவோ, அவர் செய்த சில அரசியல் கீழ்த்தரத் திருவிளையாடல்களை, பச்சைத் தமிழர் சாதித்த அரிய சாதனைகள் எனப் பேசுவதற்கும், அதற்காக அவரைப் பாராட்டுவதற்கும் என்ன நியாயமிருக்கிறது? நிற்க,

தங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய தேவிகுளம்—பீர்மேடு தமிழ்ப் பகுதிகளைப் பெற முடியாது, தாங்கள் தவித்துக் கிடப்பது, பச்சைத் தமிழர் ஆட்சியால்தான் என்பதைத் தமிழ் மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

முழு அளவில் பெற்ற செங்கோட்டைச் செல்வத்தையும், பாதியளவாகக் குறைத்துக் கொள்ள வேண்டிய துன்ப நிலையைத் தாங்கள் பெற்றதற்கு பச்சைத் தமிழரே முழுதும் பொறுப்பாளி என்பதைத் தமிழ் மக்கள் என்றும் மறந்துவிடப் போவது கிடையாது.

தங்கள் தாயகத்திற்குத் தமிழ் நாடு என்றத் தன்மானப் பெயரை இடமுடியாது என மூடப்பிடிவாதம் பிடித்து வருகிற பச்சைத் தமிழரின் தமிழர் பாசத்தை, இன்னமும் அறிந்து கொள்ளாதத் தமிழ் மகன் தமிழ்த்தரணியில் இன்று இருக்க முடியாது.

இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம் பச்சைத் தமிழர் ஆட்சியில் தமிழ் மக்கள் பட்டுள்ள அல்லல்களை.

தனது ஆட்சியில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள எரிச்சலையும் ஏமாற்றத்தையும் மாற்றும் நினைப்புடன் காலவரையறை செய்யாது வெறும் பகட்டாகத் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கிவிட்டது, தமிழ் மக்களுக்கு பச்சைத் தமிழர் இழைத்துள்ளத் தீங்குகளை மறைக்கப் போதியதாகாது. நிற்க,

கைத்தறி நெசவாளர்களுக்கு அடிக்கடி அல்லல் வந்து கொண்டு இருக்கிறது. வேலையில்லா வேதனைக்கு அவர்கள் என்றும் பலியாகாவண்ணம், அத்தொழிலை நிறைந்த பலம் வாய்ந்த அடிப்படையின்மீது அமைப்பதற்குப் பச்சைத் தமிழர் ஆட்சி, இதுவரை சிறப்பாக ஒன்றுமே செய்யவில்லை என்பதை நெசவாளர்கள் அறிந்தே இருக்கின்றனர். இத்துறையில் கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களும் விற்பனை நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஒப்புக்கொண்டுதான் மேற்படி குற்றச்சாட்டை நாம் பச்சைத் தமிழர் ஆட்சிமீது சாட்டுகிறோம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

இப்பொழுது கைத்தறித் துணி ரகத்தைச் சேர்ந்த 'சென்னை கைக்குட்டை' கைலி ரகத் துணியை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களைத் துன்பம் தொடரத் தொடங்கி இருக்கிறது. சென்ற ஒருமாத காலமாக அத்தொழிலில் ஈடுபட்டிருந்த நெசவாளர்கள் வேலையில்லாக் கொடுமைக்குப் பலியாகிக் கிடக்கிறார்கள்.

இதன் பலனாக ஏறத்தாழ 50,000 நெசவாளர் குடும்பங்கள் வறுமைக் கொடுமைக்கு ஆளாகி உள்ளன என்று தெரியவருகிறது.

அவர்கள் நெசவு செய்து வந்த 'சென்னை கைக் குட்டை' கைலி பெரிதும் வட ஆப்பிரிக்கா பகுதிகளுக்கு இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அக்கைலியை விரும்பி வாங்கிப் பயன்படுத்துகிறவர்கள் அங்குதான் உள்ளனர்.

இப்பொழுது வட ஆப்பிரிக்கப் பகுதிகளில், அக்கைலிகளுக்குக் கிராக்கிக் குறைந்துள்ளது.

இதற்கு வெளிநாட்டுப் போட்டியும், உள்நாட்டுத் தொழிலுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற அங்குள்ளோர் கருத்தும் காரணங்களாகும் என்று, விபரம் அறிந்தோர் கூறுகின்றனர்.

இங்குள்ள இரண்டொரு ஏற்றுமதி வியாபாரிகள், அக்கைலியை உற்பத்தி செய்து வரும் நெசவாளர்களின் வயிற்றில் அடித்துக் கூலியை மேலும் குறைப்பதற்காக, இக்கைலிக்கு வட ஆப்பிரிக்கப் பகுதிகளில் தேக்கம் ஏற்பட்டு இருப்பதாகப் பொய் புகல்கின்றனர் என்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள சில வர்த்தகர்களும் கூறுகின்றனர்.

காரணம் எதுவானாலும், அந்த ரகக் கைலியை உற்பத்தி செய்துவந்த 50,000 நெசவாளர் குடும்பம் பட்டினிகிடக்கிறது சென்ற ஒருமாத காலமாக என்பது உண்மையாகும். அதுபற்றி இந்த ஒருமாத காலமாகப் பச்சைத் தமிழர் ஆட்சி அலட்சியமாக இருந்துவந்திருக்கிறது என்பதும் மிகப் பெரும் உண்மையாகும்!

மேற்படி நெசவாளர்கள் சார்பில், தூது சென்று, நிலைமையை விளக்குகின்ற வரையில் 50,000 நெசவாளர் குடும்பங்கள் ஒரு மாத காலமாகத் தொழிலற்றுக் கிடக்கும் சோகச் செய்தியைத் தெரிந்துகொள்ளாதிருந்த ஒரு ஆட்சியை, ஆளும் திறம் படைத்த ஆட்சி என்று எவர்தான் கூற முன்வருவர்? தமிழர்கள் அல்லலைத் தெரிந்துகொள்ளத் தவறிய ஒரு ஆட்சியைப் பச்சைத் தமிழர் ஆட்சி எனச் சொல்வதுதான் எப்படிப் பொருந்தக்கூடும்?

50,000 குடும்பங்கள் ஒரு திங்களாகத் துன்பத்தில் துடித்துக் கிடந்ததைத் தாமாகத் தெரிந்து கொள்ளும் இரக்கமும் ஆற்றலும் அற்றுக்கிடந்த பச்சைத் தமிழர் ஆட்சி, இனி அவர்கள் துன்பத்தை எப்பொழுது துடைக்கப் போகிறது என்பதை எவரால்தான் நிச்சயித்துக் கூறமுடியும்?

இந்த இலட்சணத்தில் பச்சைத் தமிழர் ஆட்சியின் ஆளும் திறம் இருக்கிறது! இந்த அவலட்சண ஆட்சிக்கு மீண்டும் குத்தகை தரவேண்டும் என எந்தத் தமிழ் மகன்தான் கூற முன்வருவான்.

50,000 நெசவாளர் தவிக்கின்றனர்

சென்னை அமைச்சரிடம் முறையீடு

சுமார் ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள 'சென்னை கைகுட்டை' என வழங்கப்படும் ஒருவகை லுங்கித் துணிகள் விற்பனையின்றி தேங்கிக் கிடப்பதால், சுமார் 50,000 கைத்தறி நெசவாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டியதுடன் இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்றும் சென்னைத் தொழில் அமைச்சர் பக்தவத்சலத்திடம் தூதுக்குழு ஒன்று வற்புறுத்தியிருக்கிறது.

புதுடில்லி, சன. 11—

1956—57-ம் ஆண்டில் யானைக்கால் வியாதிக் கட்டுப்பாட்டிற்காக ரூ 158 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இந்தக் காலத்தில் 20 கட்டுப்பாடு நிலையங்கள் நாட்டில் ஏற்படுத்தப்படும்.

ஏகாதிபத்தியம் கையாண்ட முறையை விட்டுவிடமாட்டார்களாம்

வி. டி. சவர்க்காரின் சொத்துக்களை திருப்பித் தர முடியாதாம்!

இந்தியப் பேரரசின் அமைச்சர் தரும் பதில்

பிரிட்டிஷ் ஆட்சியில் பறிமுதல் செய்யப்பட்ட வி. டி. சவர்க்காரின் சொத்துக்களைத் திருப்பி ஒப்படைக்குமாறு மக்கள் சபை உறுப்பினர் என். பி. காரே இந்திய சர்க்காரைக் கோரியிருந்தார்.

அக்கோரிக்கைக்கு இந்தியப் பேரரசின் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் பதில் தெரிவித்துள்ளார். அதில், சட்ட நிலைமையை நன்கு பரிசீலனை செய்த பின்னர், பறிமுதலை ரத்து செய்யவோ அல்லது தன்னுபடி செய்யவோ உத்தரவிடுவதற்கில்லை என்ற முடிவுக்கு இந்திய சர்க்கார் வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்.

மக்கள் சபை உறுப்பினர்கள் மீது பழி சுமத்திய ஆசிரியர்

'குற்றவாளி' என சபைக் குழு குற்றச்சாட்டு

லண்டன், சன. 12—

மக்கள் சபை உறுப்பினர்கள் மீது கேவலமான பழி சுமத்தினார் என்பதாக லண்டன் 'சண்டே எக்ஸ்பிரஸ்' இதழின் ஆசிரியர் ஜான் ஜூனர் என்பாரை, மக்கள் சபையின் குழு ஒன்று 'குற்றவாளி' என்று குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அந்தப் பத்திரிகையில் அவர் 'பெட்ரோல் பங்கீடு சமயத்தில், மக்கள் சபை உறுப்பினர்கள் மட்டும் தேவைக்கு அதிகமான அளவில் பெட்ரோல் வாங்கிக்கொள்கின்றனர்,' என்றும், 'அரசியலில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஊதாரித்தனமான வகையில் அலவன்சுகள் வழங்கப்பெறுகின்றன' என்றும் எழுதியிருந்தாராம்!

அந்த ஆசிரியர்மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மக்கள் சபைக் குழு, சபையைக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து அவ்விதழ் ஆசிரியர் தமது கருத்தைக் கூறுகையில், தாம் மக்கள் சபைக்கு விரோதமானவகையில்—மரியாதைக் குறைவானவகையில் ஒன்றும் நடந்துகொள்ளவில்லை என்றும், தம்முடைய கருத்துக்கள் உண்மையிலேயே உறுப்பினர்களை மரியாதைக் குறைவாக பேசவேண்டுமென்பதற்காக எழுதப்பட்டவை எனக் கருதப்பட்டால் அதற்காகத் தாம் வருந்துவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

'தேசீயம்' பேசுவோர் இலட்சியப் பண்பு!

'இன்றைய அரசியல்தலைவர்கள் ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு தேசிய மொழியைப் புகுத்தவேண்டும் என்று விரும்புகிறார்கள்; ஆனால் அவர்களுடைய குழந்தைகளை மட்டும் ஆங்கிலம் போதனை மொழியாக இருக்கும் பள்ளிகளுக்கும், வெளிநாட்டுக் கல்லூரிகளுக்கும் அனுப்பி வைத்துப் படிக்கச்செய்வதில் அதிக அக்கரை எடுத்துக்கொள்கிறார்கள்" என்று குசராத் பல்கலைக் கழகத் துணைவேந்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

செயல் வேறுஇல்!

இரயில்வே நிலையங்களில் ஆடம்பரமாகவும், 'கௌரவம்' காக்கும் முறையிலும் அதிகச் செலவில் இனி இந்திய இரயில்வே இலாகா கட்டிடங்களை நிர்மாணிக்காதாம்!

'இரயில்வே இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ரூபாயையும் சரியான முறையில் பயன்படுத்தவேண்டியிருக்கிறது,' என்று இரயில்வே அமைச்சர் செகசீவன்ராம் கூறியுள்ளார்.

30,000 பேர் உழைத்து உருவாக்கிய 15,748 அடி நீளமுள்ள இராகுட் அணை திட்டம்

288 சதுர மைல் பரப்பளவு உள்ள நீர்த் தேக்கம்; மேட்டூரைபோல் மூன்றுமடங்கு தண்ணீர்தேங்கிநிற்கும்

வடக்கு மாநிலத்தில் உற்பத்தித் தொழில்களை உருவாக்குவதற்கு வழிகோலுகிறது!

400 மைல் கரை நீளம் — சில தகவல்கள்

இராகுட் அணை உலகத்திலேயே மிகவும் நீளமான காங்கிரீட் கட்டுமான மண் அணையாகும்.

பிரதான அணை மட்டும் மொத்தம் 15,748 அடி நீளமுள்ளது. இதில் காங்கிரீட் - கட்டுமான வேலைப் பகுதியின் நீளம் 3,768 அடி; பாக்கியுள்ள பகுதி மண்ணாலானது; அணையின் உச்சமான உயரம் 200 அடி; அணையின் இருமருங்கிலும் மொத்தம் 13 மைல் நீளத்திற்கு மண் கரைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அணையில் கட்டுமான வேலை உச்ச அளவுக்கு நடைபெற்றுவந்த காலத்தில், மொத்தம் 30,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர்

இராகுட் நீர்த் தேக்கம் மொத்தம் 288 சதுரமைல் பரப்பளவு உள்ளது; மொத்தம் 47 200 ஏகரா அடி தண்ணீர் அதில் தேக்கிவைக்கப்படும். அதன் கரையின் நீளம் மொத்தம் 400 மைல்; இந்தத் தேக்கத்தில் துங்கபத்திராவைப்போல இரண்டு மடங்கு தண்ணீரும், மேட்டூர்த் தேக்கத்தைப் போல மூன்று மடங்கு தண்ணீரும் தேக்கிவைக்க முடியும்.

இராகுட் கால்வாய்த் திட்டத்தின்மூலம், 1958-59-ம் ஆண்டுக்குள்ளாக மொத்தம் 4,54,000 இலட்சம் ஏகரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துவிடும். ஒரு இலட்சம் ஏகரா நிலத்துக்கு கால்வாய்ப் பாசன வசதி ஏற்கனவே கிடைத்துவருகிறது.

இராகுட் அணைத் திட்டத்தின் முதல்கட்ட வேலை பூர்த்தியாகும் போது மொத்தம் 1,23 000 கி. வா. மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான சாதன வசதி அங்கு ஏற்பட்டிருக்கும்.

ஒரிசா மாநிலத்தில் இரும்பு, நிலக்கரி, மாங்கனீஸ், பாக்சைட், சுண்ணாம்புக் கல், குரோமைட் ஆகியவைபோன்ற கனி வகைகளின் படிவங்கள் ஏராளமாக உள்ளன. இந்த இயற்கை வளங்களைப் பயன்படுத்த வகை செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளில் இராகுட் அணைத் திட்டம் முதலாவது முக்கியமான நடவடிக்கையாகும்.

இந்தத் திட்டத்தின் பயனாக ஒரிசா மாநிலத்தில் இரண்டு அலுமினியம், உருக்கு, காகிதம், துணிகள் அயக்கலப்புள்ள மாங்கனீஸ் ஆகியவைபோன்ற உற்பத்தித் தொழில்களை அமைப்பதற்கு வகையேற்பட்டுவிடும்,

தேர்தல் படிப்பினையை மறந்துவிட்டு தோழர்கள் கேலி பேசும் விந்தை!

இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

"காங்கிரசார் நம்மைப் பற்றி இப்படி தூற்றிக்கொண்டிருக்கிறார்கள் ஒருபுறம்; மற்றொருபுறம் கம்யூனிஸ்டுகள் 'இவர்கள் வெற்றிபெறுவார்களா?' என்று கேட்கின்றனர்.

"இவர்கள், பெரிய தத்துவ ஞானி என்று போற்றித் துதிபாடும் கார்ல் மார்க்ஸ், கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை எழுதும் வாய்ப்பை இங்கிலாந்தில் பெற்றார். அந்த இங்கிலாந்தில்தான் கடந்த 1950-ல் 100 இடங்களுக்கு போட்டியிட்டது கம்யூனிஸ்டுக் கட்சி; ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லை — நூறிலும் தோல்வி! அந்தக் கம்யூனிஸ்டு வீராதி வீரர்கள்தான் நம்மைக் கேலிசெய்கின்றனர்.

"100 வருட காலமாகக் கம்யூனிசத்தை வளர்த்து, அதன் கொள்கைகளை மக்களிடத்தில் பரப்பிவந்த இங்கிலாந்தில் 100 வருடத்திற்குப் பின்னர் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட 100 கம்யூனிஸ்டுகளும் தோல்வி கண்டனர்.

"இதை நாங்கள் எடுத்துக் காட்டுவது கேலி பேசுவதற்கு அல்ல; ஆனால், அந்த நிலைமைகளையெல்லாம் நமது கம்யூனிஸ்டுகளுக்கு இப்போது உணர்த்துவதற்காக!

"100 வருடமாகக் கொள்கையைப் பரப்பி அதன்பின் தேர்தலில் நின்று தோல்வி கண்ட கம்யூனிஸ்டுகளின் வாரிசுகள் நம்மைப் பார்த்து 'இவர்கள் வெற்றி பெற்றுவிடுவார்களா?' என்று கேட்கிறார்கள்!—ஒரு பிள்ளை பெற்றவள் ஏழு பிள்ளை பெற்றவளுக்கு வைத்தியம் செய்ததுபோல!"

இவ்வாறு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை-குளை வட. பு. அ. சௌந்திரபாண்டியனார் படிப்பக ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொழில் தகராறு சட்டம்!

தலைமை உயர் நீதிமன்றத் தீர்ப்பு

புதுடில்லி, சன. 10—

'1947-ம் ஆண்டின் தொழில் தகராறுகள் சட்டம் செல்லுபடியாகும்' என்று தலைமை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எஸ். எஸ். தென்னரசு புதிய முகவரி

கடிதம் எழுத விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:-

எஸ் எஸ் தென்னரசு,
திருக்கோட்டியூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

கே. எம். சாமி மறைவு

தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வந்த கே. எம். சாமி அவர்கள் கடந்த 8-ந் தேதியன்று காலை ஆம்பூரில் இயற்கை எய்தியதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

திரு சாமி அவர்கள், டாக்டர் அம்பேத்கார் மரணமடைந்தபின், 3 இலட்சம் இனமக்களை பௌத்த மதத்தில் சேர்க்கும் பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு உழைத்தார்

கடந்த 7-ந் தேதி ஆம்பூர் இரயில் நிலையத்திலிருந்து வீடு திரும்பிப்படுத்தவர், மறுநாள் காலையில் பிணமாகக் காணப்பட்டார்.

8—1—57ல், ஆம்பூர் கஸ்பாவில் தோல் பதனிடும் தொழிற்சங்கத் தாருட்பட ஆயிரக்கணக்கான மக்கள் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்ட மக்கள் அனைவரும் பௌத்தர்களாக மாற உறுதிகொண்டதுடன், அவருக்கு நினைவுச் சின்னமும் கட்ட அச்சுடு காட்டிலேயே முடிவெடுக்கப்பட்டது.

திரு. சாமி அவர்களின் மறைவால் வருந்தும் அவரது உற்றார் உறவினர், நண்பருக்கும் மற்றும் அவரது இன மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்குகிறோம். (ஆ-ர்.)

****

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

★

தி. மு கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி. மு க' என்ற எழுத்துக்களும், கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணா 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது. வெளியூர்க்கிளைகள்: 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

சென்னை பெரம்பூரில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

ஈ. வெ. கி. சம்பத், டி. வி. நாராயணசாமி சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

சென்னை, சன. 12—

சென்னை 6-வது வட்டம் பெரம்பூர் தி. மு. கழகக் கிளைச் சார்பில் நேற்று மாலை 6½ மணியளவில் பெரம்பூர் செல்வயல் ரோடிற்கு அருகில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் இராவணன் முன்மொழிய, தோழர் திரவியன் வழிமொழிய தோழர் அன்பிற்கரசன் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப்பின் தோழர் இராசமாணிக்கம் சிறிது நேரம் பேசினார்.

அடுத்து நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்கள் தி மு. கழகத்தின் தேர்தல் ஈடுபாடு குறித்துச் சிறிது நேரம் உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில், 'திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடக் கலாச்சார வளர்ச்சிக்காக மட்டுமின்றி, மனித சமுதாயத்தின் மற்ற எல்லாத் துறைகளின் வளர்ச்சிக்காகவும் பாடுபடுகிறது' என்று குறிப்பிட்டார்.

அடுத்துத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தி மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது என்ற முடிவு செய்தபின்னர், காட்டில் கடமாடித் திரியும் மாற்றுக் கட்சியினர் மக்களிடம் நம்மைப்பற்றி அவதூறுகப் பேசித்தீரவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதையும், இப்படி ஆபாசமான அர்ச்சனைகளால் தி. மு. கழகம் அடங்கி ஒடுங்கிவிடும் என எதிர்பார்க்கும் மாற்றாருக்கு எச்சரிக்கை விடுத்தும் சொற்பொழிவாற்றினார்.

இறுதியில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், அரசனைப் பார்த்துக் கேலி செய்யும் சிட்டுக் குருவியைப்போல், தி. மு. கழகத்தை மாற்றார் கேலியும் கிண்டலும் செய்துவருகிறார்கள் என்று குறிப்பிட்டார். தி மு. கழகச் சார்பில் அப்பகுதியில் நிற்கும் அபேட்சகருக்கு ஆதரவு தந்து வெற்றி தேடித் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் க. சிதம்பரம் நன்றி கவில கூட்டம் இரவு சுமார் 8½ மணியளவில் இனிது முடிவுற்றது. (ந. - கி)

கல்வித் துறையில் கருத்து குழப்பம்

துணைவேந்தர் எச்சரிக்கை

"இந்தியாவின் கல்வித் துறை விவகாரத்தில் அரசியல் வாதிகள் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருவதால் ஒரே குழப்பம் ஏற்பட்டிருக்கிறது; இன்னும் சிறிது காலத்தில் நாட்டின் பொறுப்பை ஏற்கவிருக்கும் இப்போதைய மாணவர்கள், இக்குழப்பத்தினால் மோசமான நிலையை எய்திவிடுவர்," என்று, குசராத் பல்கலைக் கழகத் துணைவேந்தர் எச். வி. திவேதியா கூறியிருக்கிறார்.

வெள்ளையர் ஆட்சியில் ரூ.10 ஆக இருந்த வானொலி லைசென்சுக் கட்டணம், தேசிய அரசாங்கம் ஏற்பட்டதும் ஆண்டுக்கு ரூ 15 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

தபால் இலாகா ஊழியர்கள் எச்சரிக்கை

சிதம்பரம், சன. —

வரும் மூன் திங்களுக்குள் தங்கள் குறைகளைக் கவனிக்காவிடில் அஞ்சல் இலாகா ஊழியர் அனைவரும் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று இங்கு நடைபெற்ற தென் ஆற்காடு மாவட்ட அஞ்சல் ஊழியர்கள் மாநாட்டில், அகில இந்திய அஞ்சல் ஊழியர் நிறுவனச் செயலாளர் திரு. ஏ. எஸ். இராசன் எச்சரித்திருக்கிறார்.

பிப்ரவரி 15-ந் தேதி ஊழியர்கள் கருப்புத் துணியை சட்டைகளில் அணிந்துகொண்டு தங்கள் குறைகளை வெளிப்படுத்துவார்கள் என்றும் அம்மாநாட்டில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

ஜனவரி
15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)
17: குமாரபாளையம்
18: உடுமலை
19: கணியூர்
20: மதுரை நகர்

ஜனவரி
21: திருச்சி நகர்
22: சேலம் நகர்
23: போளூர் வ ஆ.
24: விழுப்புரம்
25: தஞ்சை நகர்

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

காமராசர் ஆட்சிக்கு நன்றி தெரிவிக்க விழாவாம்!

நாம் முயற்சித்து வருவதாக கிராமணியார் அறிவிப்பு!

"காங்கிரஸ் ஒருநாளும் அழிந்து போய்விட வேண்டுமென்று நான் விரும்புபவன் அல்ல; காங்கிரசை ஒழித்துவிட வேண்டுமென்றும் நான் ஒருக்காலும் சொல்லமாட்டேன். என்ன இருந்தாலும் அது தானே எங்களுக்குத் (தமிழரசு) தாய் ஸ்தாபனம்?

"மற்ற எல்லாக் கட்சிகளையும் விட காங்கிரஸ் ஒருபடி மேல் ஸ்தானத்தில்தான் இருக்க முடியும். தமிழில் ஆட்சிமொழியைச் சட்டமாகக் கொண்டுவந்திருப்பது காங்கிரஸ் சர்க்கார்தானே? குமரி முனையைக் கொண்டுவந்திருப்பதும் அவர்கள்தானே? இதற்கான உழைப்பை நம்முடையதாகவே வைத்துக்கொண்டாலும் அதைக் காரியத்தில் செய்து முடித்தது அவர்கள்தான் என்ற உண்மையை மறப்பதற்கில்லை அதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டியது தான் கடமையாகும்.

"தமிழரசுக் கழகம் கோரியபடி கன்னியாகுமரி தமிழ் நாட்டுக்குக் கிடைத்துவிட்டது. தமிழ் ஆட்சி மொழியாகவும் ஆக்கப்பட்டுவிட்டது. இதற்காக சென்னை சர்க்காரை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இதை ஒட்டி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் விழா ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

"தமிழரசுக் கழகத்தின் வேலை தான் தீர்ந்துவிட்டதே; அதை கலைத்துவிடுவதுதானே—என்று கேட்கப்படுகிறது. தமிழரசுக் கழகத்தின் வேலை இன்னும் எவ்வளவோ பாக்கியிருக்கிறது! வடவேங்கடம், திருத்தணி முதலியவை இன்னும் கிடைத்தபாடில்லை. இலங்கை, பர்மா, மலேயா போன்ற இடங்களில் எல்லாம் தமிழர்கள் அனுபவித்துவரும் கஷ்டங்கள் ஏராளம். இந்தக் கஷ்டங்களை எல்லாம் எடுத்துச்சொல்லி அவர்களுக்கும் நல்வாழ்வேற்படக் கழகம் பணி செய்யவேண்டியிருக்கிறது. கழகம் அடையவேண்டிய இலட்சியங்கள் பல இன்னுமிருக்கின்றன. ஆகையால் தமிழரசுக் கழகம் ஒருபோதும் கலைக்கப்படமாட்டாது என்பதை உறுதியாகக் கூறுகிறேன்."

இவ்வாறு தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள், கும்பகோணம் அரண்மனைத் தோட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

—'சுவ!இந்தியா'-கோவை 11—1—57



9—1—57-ல் சென்னை—கோட்டையில், தேர்தல் பொறுப்பு வகிக்கும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுடன் பொதுத் தேர்தல் சம்பந்தமாகக் கலந்துபேசிய பல்வேறு கட்சிப் பிரதிநிதிகளுடன் தி. மு. கழகத் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தி. மு. கழகத் தேர்தல் விஞ்ஞாபனக் குழு உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்களும் கலந்துகொண்டனர்.

தேர்தல் நிதி தாரீர்!

வரவு :

	ரூ.	அ.	பை
முன் (7—1—57) இதழ்ப்படி.	36,461	11	0
அ. வி. முகமது, கட்டிமேடு	20	0	0
விளக்குடி தி. மு. கழகம் எஸ், சாம்பசிவம்	51	0	0
சிதம்பரம் சி. அப்பர்	1	0	0
மோகூர் (தெ. ஆ.) தி. மு. க. கலியமூர்த்தி	10	0	0
வாசவன், கூடலூர்	1	8	0
இராமநாதபுரம் ஆர். இராசன்	5	0	0
கடம்பத்தூர் ஏ. வீராசன்	5	0	0
பம்பாய்—மாதுங்கா போடர் பொருளாதாரக் கல்லூரித் தோழர்	5	0	0
மணலார் எஸ்டேட் கே. எம். ஜோதிமுத்து	7	5	0
பொறையார் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில்—அண்ணா, என். வி. நடராசன் ஆகியோர் மூலம்	500	0	0
மாரண்டஅள்ளி (சேலம்) பொதுக்கூட்டத்தில்—மு. கருணாநிதி மூலம்	232	13	6
தர்மபுரி தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில்—அண்ணா, என். வி. நடராசன் மூலம்	475	1	9
சேலம் பொதுக்கூட்டத்தில்—சேலம் நகர தி. மு. கழகச் சார்பில்	1,346	12	9
அரூர் (சேலம்) தி. மு. கழகச் சார்பில்—அண்ணா, என். வி. நடராசன் மூலம்	1,050	12	7
வெல்லோணி (வால்பாறை) 2-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில்—ஈ. வெ. கி. சம்பத் மூலம்	13	2	0
ஆறுபாதி (தஞ்சை) தி. மு. கழகம்	51	1	11
ஒழுகமங்கலம் இளங்கோ மன்றம்	3	0	0
திருப்பூர் தி. மு. கழகம்—அண்ணா, என். வி. நடராசன் மூலம்	436	12	4
திருப்பூர் பனியன் கம்பெனி தொழிலாளர்கள்	65	0	0
பல்லடம் தி. மு. கழகம்	25	0	0
குளித்தலை தி. மு. கழகப் பொதுக்கூட்டம்—அண்ணா, என். வி. நடராசன் மூலம்	300	0	0
சித்தலவாய் தோழர்கள்	10	0	3
குளித்தலை மருத்துவ முடிதிருத்தும் சங்கம்	1	9	3
3—1—57-ல் கோவையில் நடைபெற்ற 'சந்திரோதயம்' நாடகத்தின் மூலம்	3,000	0	0
தொட்டம்பட்டி தி. மு. கழகம்	31	0	0
புளியம்பட்டி தி.மு.க.	40	0	0
முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றம்	0	12	9
சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை மக்கள் மன்றச் சிறப்புக் கூட்டத்தின் மூலம்	400	0	0
கொடைக்கானல் தி. மு. க. ஜோசப்தம்புசாமி	15	12	0
திண்டுக்கல் தி. மு. கழகம் அ. சுப்பையா	55	0	0
வடுவூர் தி. மு. கழகம்	20	0	0
ராசக்காபட்டி திராவிட விவசாய மன்றச் செயலாளர் நா. முத்துசாமி	4	2	0
வத்தலக்குண்டு தி. மு. கழகம்—கே. வி. சாமி மூலம்	20	0	0
சிங்கப்பூர் பபலோ ரோடு தோழர் க. நடராசன் மூலம்—பல தோழர்கள் அன்பளிப்பு	68	0	6
பெங்களூர் எஸ். கே. ஏ. ஈஸ்வரன்	1	0	0
பெரியகுளம் தென்கரை ஏ. எஸ். அனீபா	20	0	0
குப்பிநாய்க்கம்பட்டி தி. மு. கழகம்	15	0	0
துறையூர் பெ. ராமராசன்	5	0	0
விழுப்புரம் ச. அ. பழனிசாமி	14	8	0
செல்லம்பட்டி தி. மு. கழகம்	20	0	0
சிங்கப்பூர் தங்கிலியன் ரோடு அ. சி. அடைக்கப்பன் மூலம்	100	0	0
ஜன். தங்காராஜ 56 A.P.O.	18	0	0
காரிப்பட்டி (சேலம்) தி. மு. கழகம்	17	6	0
விழுப்புரம் ஆர். கோவிந்தசாமி	3	0	0
இராமநாதபுரம் கா. வி. அண்ணாதாசன்	5	0	0
மரமடக்கி தி. மு. கழகம்	10	0	0
நெல்லை மாவட்டம் முத்து மொகிதீன், தெ ஆ. மாவட்டம் அப்துல்ரஜாக்	5	0	0
சத்தியவேடு தி. மு. கழகச் செயலாளர் எம். கே. வி. கோபால்	10	0	0
மேலப்பாளையம் தி. மு. கழகம்	8	7	0
நாலூர் (முகவை) சு. வ. நவநீதகிருஷ்ணன்	2	0	0
திருமங்கலம் சந்தைகிராமம் எம். ஏ. ஈசாக்கு	3	12	0
காஞ்சிபுரம் ஆர். கே. சுந்தரம்	5	0	0
விழுப்புரம கே. நாராயணன்	2	0	0
கீரனூர் தி. மு. கழகம்	1	0	0
ஆக மொத்தம் ரூ.	44,899	6	7

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

அறிவிப்பு

சேவூர் (வ. ஆ) தி. மு. கழக உறுப்பினர் தோழர் கே. டி. குப்புசாமி அவர்களுக்கு அறிவிப்பது:—13—1—57 அன்று தங்கள் தந்தையார் இயற்கையெய்தினர். தாங்கள் உடன் புறப்பட்டு ஊர் வந்து சேரவும்.

வி. இ. செயராமன்
செயலாளர், தி. மு. கழகம்
சேவூர் (வ. ஆ.)

15,000 ஆசிரியர்கள் ஒருநாள் உண்ணா நோன்பு

புதுடில்லி, சன. 12—

டில்லியில் உள்ள சுமார் 15,000 ஆசிரியர்கள், ஊதிய உயர்வு, 'கிரேடு' பிரிவுகளில் மாறுதல் கோரி ஒருநாள் உண்ணாநோன்பை மேற்கொண்டனராம் ; என்றாலும், வழக்கம்போல் தங்கள் அலுவல்களைக் கவனித்தனராம் !

திராவிடர் திருநாள் தனிச் சிறப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நடுங்கவைத்திருக்கிறது என்றார்.

பின்னர் நாதசுவரம், சிலம்பம், இன்னிசை இவை மூலம் மக்களை மகிழ்வித்த குழுவினருக்கும், கூட்டத்தைச் சிறப்புற நடத்தத் துணை புரிந்த சென்னை 50-வது வட்ட தி மு கழகக் கிளைக்கும், ஒளி, ஒலி அமைப்புகளைத் திறம்படச் செய்திருந்த பாரதி ஒலி நிலைய அதிபர் டி. கே. கபாலிக்கும் பொதுச் செயலாளர் அவர்களால் கோப்பை, பதக்கம், நற்சான்று இதழ்கள் பரிசளிக்கப்பட்டன.

பின்னர் தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில், உலக வரலாற்றிலேயே முதலாவதாகத் தேர்தலில் ஈடுபடுவதில் 205-ல் 150 இடங்களில் போட்டியிடுகிற பெருமை தி. மு. கழகத்தையே சார்ந்தது என்றும், அரியலூர் போன்ற விபத்துக்களை உருவாக்கிய ஆட்சியின் அதிபதிகளுக்கு மக்கள் அவசியம் பாடம் கற்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்து, சென்னை சூளை 17வது வட்டம் சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தைச் சார்ந்த சிறுவன் கசேந்திரன் 'கல்வி' என்னும் பொருள் பற்றிச் சிறிதுநேரம் பேசினான்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் ஈடுபாடு ஓர் மகத்தான ஜனநாயகக் கடமை என்றும், பொங்கல் விழாவைத் திராவிடர் திருநாளாக்கிய பெருமையும், நாட்டில் நல்ல தமிழ் நடமாடச் செய்த பெருமையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையே சார்ந்தது என்றும், கழகம் மேலும் பணி புரிய தேர்தலில் மக்கள் ஆதரவு தர வேண்டிய அவசியம் குறித்தும் விளக்கினார்.

அடுத்துத் தோழியர் சத்தியவாணிமுத்து பொங்கல் விழாவின் முக்கியத்துவம் குறித்தும், நமது தேர்தல் ஈடுபாடு நாட்டில் உருவாக்கியுள்ள மாறுதல் குறித்தும், தாய்மார்கள் தி. மு. கழகத்திற்கு வாக்களிக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

இறுதியாகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பொங்கல் விழா மட்டுமே தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படுவதன் காரணம் குறித்தும், தமிழகத்தின் பண்டையச் சிறப்புப் பற்றியும், தமிழ் மன்னர்களின் படையெடுப்புகள் அளித்த வெற்றிகள் குறித்தும், தி. மு கழகத் தோழர்களின் தேர்தல் பணி குறித்தும், ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாடு அலட்சியப்படுத்தப்பட்டுள்ளதை விவரித்தும், தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகள் காமராசரின் திறமையின்மையால் மற்ற மாநிலங்களோடு சேர்க்கப்பட்டுள்ளது குறித்தும், பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்தைப் பொது மக்கள் ஆதரிக்கவேண்டிய அவசியம் குறித்தும் சிறந்ததொரு விரிவுரை நிகழ்த்தினார்கள்.

கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்களுக்குப் பல கிளைகள், நிறுவனங்கள் சார்பில் கைத்தறித் துண்டுகள் அளிக்கப்பட்டதுடன், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு சென்னை 44-வது வட்ட கிளையின் சார்பில் ரூ. 151-ம், 50-வது வட்ட கிளையின் சார்பில் ரூ 75-ம் 49-வது வட்ட கிளையின் சார்பில் ரூ 10-ம், இராயப்பேட்டை முத்தமிழ் நாடக மன்றச் சார்பில் ரூ. 14-4-0-ம், மற்றும் தனிப்பட்ட தோழர்கள் சிலராலும் பண முடிப்புகள் அளிக்கப்பட்டன.

தோழர் நி. சமூகன் நன்றிகூற விழாக் கூட்டம் இனிது முடிந்தது.

விழாவிற்கு ஏராளமான தாய்மார்கள் உட்பட திரளான மக்கள் வந்திருந்தனர்.

விழா தென் சென்னை வட்டாரத்தில் தனித்தன்மை பெறத்தக்க ஒன்றாகத் நிகழ்ந்தது. (ந. நி)

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை S. I. A. A. திடலில் : 15-1-57 மாலை 6-30மணிக்கு
திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்
எஸ் பக்கிரிசாமிப் பிள்ளை எம்.எல் ஏ., எம்.சி. அவர்கள் தலைமையில்
திரு எம். ஜி. இராமச்சந்திரன் & குழுவினர் அளிக்கும்
'இன்பக்கனவு' (தமிழ் நாடகம்)
தனிப்பகுதி : ரூ. 3, 2, 1. அணா 8. திறந்த வெளி இலவசம்
இதர காட்சிகள், சைக்கிள் விளையாட்டு, தேகப்பயிற்சி சர்க்கஸ், தந்திரக் காட்சி, சிற்பக்கலை, உஷா வீணை வாத்தியம், இன்னும்பல
பிரவேசக் கட்டணம் 0—5—0

16—1—57 : ராதாராணி, சரோஜா குழுவினர் அளிக்கும்
ஓரியண்டல் நடனம்
எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

திருமண அழைப்பு

பேரன்புடையீர் !

திருவள்ளுவர் ஆண்டு 1987 தைத் திங்கள் 8-ம் நாள் (21—1—57) திங்கட்கிழமை காலை 8-30 மணியளவில் எனது தங்கை செல்வி சீதாலெட்சுமிக்கும் 'உரிமைக் குரல்' ஆசிரியர் திரு வி. எஸ். முருகன் அவர்களுக்கும், திரு கு. வன்னியசிங்கம் எம்.பி. அவர்கள் தலைமையில், கொழும்பு 22, கல்பொத்த வீதியிலுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

திரு எஸ். இராசதுரை எம்.பி., திரு அ. அமிர்தலிங்கம் எம்.பி., மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர். தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

82/13 குமாரவீதி, கொழும்பு — அன்பன்,
7—1—1957 — பி. செல்வநாதன்

பொங்கல் நாள் விழா

★

வன்னியர்பாளையம் :

16—1—57 காலை 9-மணிக்கு பொங்கல் விழாவையொட்டி வீதி அலங்காரப் போட்டித் தேர்வும், பகல் 12-மணிக்கு மாதவபுரத்தில் (வள்ளுவர் வீதி) அ. ஜெயராமன் தலைமையில் உணவளித்தலும், மாலை $2\frac{1}{2}$ மணிக்கு மாரியம்மன் கோவில் பின்புறத்திடலில் தோழர் இரெ. இளம்வழுதி தலைமையில் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.

புதுவை :

16—1—57 மாலை 6-மணிக்கு, ஒதியஞ்சாலைத் திடலில், தோழர் சு. பெருமாள் தலைமையில் பொங்கல் விழாக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் இரெ. இளம்வழுதி, என். எஸ். இளங்கோ பேசுவர்.

வேலூர் :

16—1—57 மாலை 6-மணிக்கு, வேலூர் — கொசப்பேட்டை மாரியம்மன் கோவில் தெரு தமிழ மன்றச் சார்பில் தோழர் வே. தலோகநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ கே. வில்வம், அ. கருத்தோவியன், வேலை, அரங்கன் பேசுவர்.

கடமங்குடி :

16—1—57 மாலை 6-மணிக்கு தி. மு. க. கட்டிடத் திறப்புவிழா, கே வி. கே. சாமி படிப்பகத் திறப்புவிழா, பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் தோழர் பொ. தருமன் தலைமையில் நடைபெறும் தோழர்கள் இராதாகிருட்டிணன், வி.காளிதாசு, ம கோ.மணி, சு பத்மநாபன், மற்றும் பலர் பேசுவர்.

காஞ்சீபுரம் :

16—1—57 இரவு 10-மணிக்கு, பொங்கல் விழாவை யொட்டி காஞ்சி நகரசபை எதிரில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி அரங்கில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் 'மணிமகுடம்' நாடகம் நடைபெறும்.

குணியமுத்தூர் (கோவை)

20—1—57-ல், கிளைக் கழகச் சார்பில் நடைபெறவிருக்கும் பொங்கல் விழாவையொட்டி, 'அரசியலில் கம்யூனிஸ்டுகளின் பல்டி' அல்லது 'ஐந்தாண்டுத் திட்டத்தில் திராவிட நாட்டிற்கிழைக்கப்பட்ட அநீதி' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டிகளும், தி. மு. கழகப் பிரச்சார இசைப் போட்டியும் நடைபெறும். இப்போட்டிகளில் பங்கு பெற விரும்புவோர், 18—1—57-க்குள் 'செயலாளர், தி. மு. கழகம், குணியமுத்தூர், கோவை'—என்ற முகவரிக்கு எழுதிப் பதிவு செய்து கொள்ளவும்.

20—1—57 மாலை 6 மணிக்கு மாரியம்மன்கோயில் திடலில் நடைபெறும் விழாக் கூட்டத்தில் திரு. சி. சிதம்பரனார், சு. ஆறுமுகம், கு சி நெடுங்கிள்ளி, தங்கமாணிக்கம் ஆகியோர் பேசுவர்.

திருப்பூர்

16—1—57 மாலை 6 மணிக்கு, திருப்பூர் நொய்யல் நதிக்கரையில் தோழர் கே. பழனிசாமி தலைமையில் அழகிரி நாடக மன்றத்தினரால், 'நச்சுக் கோப்பை' நாடகமும் சிலம்ப விளையாட்டுக்கள், சடுதிச் சண்டை விளையாட்டுக்கள், கால்பந்தாட்டப் போட்டிகளும் நடைபெறும். போட்டிகளில் வெற்றி பெறுவோருக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

காஞ்சீபுரம் நகர தி. மு. கழகத் தோழர்கட்கு :

"16—1—57 காலை 10-மணிக்கு, சின்ன காஞ்சிபுரம், திருக்கச்சிநம்பி தெரு, எண் 80 'திராவிட நாடு' அலுவலகத்தில் காஞ்சி தொகுதி பொதுத் தேர்தல் சம்பந்தமாக தி. மு. கழகம் மேற்கொள்ள வேண்டிய வேலை முறை குறித்துத் திட்டம் வகுக்க தி. மு. கழகத் தோழர்கள், ஆதரவாளர்களடங்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் தோழர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்."

என்று, காஞ்சிபுரம் நகர தி மு. கழகச் செயலாளர் இரா. வெங்கடேசன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.